இயல்
ஒன்று

# வழக்கு

எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும். நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே நாமும் பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என வழக்கு இருவகைப்படும்.

## இயல்பு வழக்கு

ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு ஆகும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.

1. இலக்கணம் உடையது
2. இலக்கணப்போலி
3. மரூஉ

### 1. இலக்கணம் உடையது

நிலம், மரம், வான், எழுது - ஆகிய சொற்களை நோக்குங்கள். இவை தமக்குரிய பொருளை எவ்வகை மாறுபாடும் இல்லாமல் இயல்பாகத் தருகின்றன. இவ்வாறு இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணம் உடையது ஆகும்.

### 2. இலக்கணப்போலி – எழுத்துப்போலி, சொற்போலி

#### சொற்போலி

இல்லத்தின் முன் பகுதியை இல்முன் எனக் குறிக்க வேண்டும். ஆனால், அதனை நம் முன்னோர் முன்றில் என மாற்றி வழங்கினர். கிளையின் நுனியைக் கிளைநுனி எனக் கூறாமல் நுனிக்கிளை எனக் குறிப்பிடுகிறோம்.

இவ்வாறு இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும், இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

**தெரிந்து தெளிவோம்**

**வாயில்–வாசல்**

இல்லத்துக்குள் நுழையும் வழி இல்வாய் (இல்லத்தின் வாய்) எனக் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால், அதனை வாயில் என வழங்குகிறோம். இது இலக்கணப் போலியாகும்.

வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் வாசல் என வழங்குகிறோம். இது மரூஉ ஆகும்.



7th Std - Tamil_2025_Term_III_Unit 1.indd 13 8/18/2025 2:10:57 PM